www.padippakam.com


# மக்கள் பாதை ☆

பாதை: 2 · பயணம்: 2


திருவள்ளுவராண்டு 2016 · தை, மாசி 85


அடக்கு முறைகளை
உடைத்து எறிந்திட
எழுதுகோல்
இங்கோர் —
தெம்புகோல் ஆகட்டும்!



# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் போலித்தனங்களின்றி வரவேற்றது!

அமரர் ஒபரோய் தேவனின் படுகொலைக்குப் பின்னர் தமிழீழ விடுதலை இராணுவத்தை நெருக்கடிகளில் இருந்து பாதுகாத்து வலிமையான அமைப்பாக அதனைக் கட்டியெழுப்பியவர்களில் தோழர் ஒஸ்ரோவும் தோழர் செந்திலும் தோழர் காந்தனும் முதன்மையானவர்கள். 26-1-1985ல் இடம்பெற்ற தமிழீழ விடுதலை இராணுவத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் தோழர் செந்தில் தமிழீழ விடுதலை இராணுவத்தின் இணைச்செயலாளர்களுள் ஒருவராகவும் பதில் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மறு இணைச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டவர் தோழர் காந்தன் அவர்களாவர்.



தோழர் தேவன்



தோழர் செந்தில்

அண்மையில் மீண்டும் தமிழீழ விடுதலை இராணுவம் பிற இயக்கமொன்றின் ஊடுருவலாலும் தாக்குதலாலும் பாதிக்கப்பட்டது. எனினும் தமிழீழ விடுதலை இராணுவத்தினர் ஒன்றுபட்டு நின்று தமது ஸ்தானத்தைப் பாதுகாத்துடன் முன்னைவிடச் சிறப்பான முறையில் தமது ஸ்தாபனத்தை அவர்கள் மீளமைத்துள்ளனர் இத்தகைய வெளியார் தாக்குதல்களின் போது சில அமைப்புகள் தமிழீழ இராணுவத்தினரின் காலை வாரி விடுவதற்கு எடுத்த முயற்சிகளும் தோல்வியடைந்து போய்விட்டது. இத்தகைய நெருக்கடிகளைக் கடந்த காலங்களில் அமைப்புகளும் எதிர்கொண்டுள்ளன. எனினும் தமிழீழ விடுதலை இராணுவம் நெருக்கடிகளை எதிர்நோக்கியபோது அவர்களுடன் கூட்டமைப்பில் உள்ள தமிழீழ மக்கள் விடுதலை கழகம், கூட்டமைப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயல்ல; நடைமுறை சார்ந்தது; வளர்ச்சி பெறும் செழிப்பான தன்மையுள்ள அமைப்பு என்பதனை பல்வேறு வகையிலும் நிறுவியுள்ளனர். இத்தருணத்தில் தமிழீழ விடுதலை இராணுத்தின் இணைச் செயலாளர்களுள் ஒருவரும் பதில் தலைவருமான செந்தில் அவர்களது பேட்டியை வெளியிடுவதில் மக்கள்பாதை மகிழ்ச்சி அடைகிறது.

படிப்பகம்

**● தோழர் செந்தில் அவர்களே! தங்களது விடுதலை இராணுவத்தின் வரலாற்றை 'மக்கள் பாதை' வாசகர்களுக்கு சுருக்கமாகக் கூறுவீர்களா?**

○ எமது இயக்கத்தின் வரலாறு நமது தலைவர் அமரர் தேவனின் விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. 1981-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நமது தலைவர் தேவன் தமிழீழ விடுதலைக்குப் போராட நின்ற முற்போக்கான குடிசைவாழ் இளைஞர் குழுக்களையும் ஒடுக்கப்பட்ட இளைஞர்களது குழுக்களையும் இணைத்து தமிழீழ விடுதலை இராணுவத்தை அமைப்பு ரீதியாகக் கட்டி எழுப்பினார். மிகவும் துரிதகதியில் வளர்ச்சியடைந்த நமது இயக்கம் 1982-ன் பிற்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. முதலில் எதிரியின் உளவு வலைப்பின்னலை உடைப்பதையும் தமிழீழ விடுதலைப் போராட்ட எழுச்சியால் எதிரி அரசின் நிர்வாகம் சீர்குலைந்துவந்ததைச் சாதகமாக்கத் தமது சமூக விரோதச் செயல்களை ஸ்தாபிக்க முனைந்த தீய சக்திகளைக் கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்திய நாம் 1983-ம் ஆண்டில் தோழர் தேவனின் தலைமையில் அரசு யந்திரத்தின் மீது நேரடித் தாக்குதல்கள் என்ற மட்டத்துக்கு நமது இராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்தினோம். இவை வெற்றிகரமாகத் தொடரப்பட்டு வருகின்றது.

**● தோழர் செந்தில் அவர்களே! தமிழீழ விடுதலை ராணுவத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவீர்களா?**

○ நமது சகல கொள்கைகளினதும் அடிப்படையாக ஏகாதிபத்திய எதிர்ப்பை நமது தலைவன் தேவன் வகுத்திருந்தார். இந்த அத்திவாரத்தில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் உகந்த வகையிலும் சர்வதேச ரீதியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைத் துரிதப்படுத்தும் வகையிலும் நமது கொள்கைகளையும் நடைமுறைகளையும் நாம் வகுத்து வருகின்றோம். இந்த அடிப்படையிலேயே நமது தலைவர் தேவன் தமிழீழத் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அதிதீவிரவாதக் கோசங்களையும் குறுகிய தேசிய வாத தமிழ் வெறியையும் நிராகரித்தார். இதுவே நமது நடைமுறைகளின் அடிப்படையாகும்.

**● தமிழீழ விடுதலை இராணுவத்திற்கு வெளிச் சக்திகளின் நடவடிக்கைகளால் இராணுவ ரீதியாகவும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறதே! இதன் மூல காரணங்கள் எவை?**

○ நமது வளர்ச்சி குடிசைவாழ் இளைஞர்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் இருத்தியது. நமது வளர்ச்சியில் ஆண்டபரம்பரையினர் மனத்தாங்கல் அடைவது விளக்கிக் கொள்ளக் கூடியதே. செங்கொடி இயக்கங்களில் கூட இத்தகைய ஆண்டபரம்பரைத் தோழர்களை நாம் சந்தித்துள்ளோம். வரலாறு நமக்கு நிரம்பவே கற்பித்துள்ளது. இத்தகைய ஒரு சூழலில் நமது தலைவர் தேவன் அரசியல் படுகொலைக்குள்ளானார்.

இதன் பின்னர் தோழர் கஸ்ட்ரோ, தோழர் சாந்தன், கூச் சேகர் என்பவர்களும் நானும் மிகுந்த சிரமங்களுக்கும் ஆண்டபரம்பரையினரின் மேலாதிக்க உணர்வுகளுக்குமிடையில் நமது இயக்கத்தை சீர்குலைக்க முனைந்த சக்திகளிடம் இருந்து காப்பாற்றினோம்.

மீண்டும் இத்தகைய ஒரு பெரும் தாக்குதல்களையும் ஊடுருவலையும் 1984-ன் பிற்பகுதிகளில் நாம் எதிர்நோக்க நேர்ந்தது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற அடிப்படையில் சில இயக்கங்கள் நடந்து கொண்டன. நமக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்குமிடையிலான கூட்டணிக்கு ஒரு அக்கினிப் பரீட்சையாகவும் இந்த நெருக்கடிகள் அமைந்தது. நெருக்கடிகள் நமக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்மிடையிலான கூட்டு நடைமுறை சாத்தியமான ஒரு யதார்த்த உண்மை என்பதை உணர்த்தியுள்ளது.

**● தமிழீழ விடுதலை இராணுவத்துக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்குமிடையிலான (PLOT) கூட்டணி நடைமுறைச் சாத்தியமான யதார்த்தம் என்கிற கருத்தை எந்த ஆதாரங்களின் அடிப்படையில் தெரிவிக்கின்றீர்கள்?**

நான் ஒரு கருத்தியல் வாதியல்ல. எனது கருத்துக்கள் அகநிலை சார்ந்ததுமல்ல. வரலாறும் விஞ்ஞான ரீதியான பொருள் முதல் ரீதியான யதார்த்தமே எனது கருத்துக்களின் அடிப்படை. தோழர் தேவனது மரணத்தின் பின் தவித்தமுயல் அடிக்க நின்றவர்களது மத்தியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் உள்நோக்கமற்ற வகையில் நமக்கு ஒத்துழைப்புத் தந்தனர். குடிசை வாழ் மக்களதும், ஒடுக்கப்பட்ட மக்களதும் இளைய சந்ததியினர் என்ற வகையில் மேலாதிக்க உணர்வுகள் பல்வேறு முகமூடிகளின் பின்னர் தமது முகத்தை காட்டக் கூடும் என்பதை நாம் உணர்ந்திருந்தோம். செங்கொடிகளுக்குப் பின்னால் கூட இத்தகைய முகங்களை [illegible] கண்டுள்ளோம், கண்டு வருகிறோம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், இத்தகைய போலித்தனங்களின்றி நமது

கருத்துகளைச் சமநிலையில் சகதோழர்களாக வரவேற்றதில் நமது தோழர்களுக்கும் அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு இயல்பாகவே ஏற்பட்டு வளர்ந்து வந்தது. இத்தகைய பரஸ்பரப் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் 1983 ஆகஸ்ட் கலவரங்களின் பின்னர் வலுவடைந்து வந்து 1984 மார்ச் மாதத்தில் உத்தியோகபூர்வ அடிப்படையில் கூட்டாக மலர்ந்தது. நமது பல்வேறு நெருக்கடிகளின் போது நமது கூட்டு தனது யதார்த்தமான தன்மையை தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது.

**● தங்கள் இரு இயக்கங்களும் பங்கு பெறும் கூட்டமைப்பு எந்த அடிப்படைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது?**

○ முதலாவதாக சுயாதீனமுள்ள விடுதலை இயக்கங்களாக நாம் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அங்கீகரித்துள்ளோம். இந்த அம்சம் ஒருவரது உள் விவகாரங்களில் ஏனையவர் தலையிடாத பண்பாலும் ஒருவரில் ஒருவர் மேலாதிக்கம் செலுத்தாத சிறப்பாலும் பலமடைந்து வருகின்றது.

அடுத்த முக்கியமான அம்சம் ஏனைய இயக்கங்களுடன் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை அமைப்பது தொடர்பான முயற்சிகளிலும் எம் கூட்டமைப்பினர் இணைந்தே ஈடுபடுதல் வேண்டுமென்பது. இக்கொள்கை தொடர்பாகவும் நமது தோழமை இயக்கமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரும் நாமும் மிகவும் உறுதியான வகையில் நமது வாக்குறுதிகளைக் கடைப்பிடித்து வருகிறோம்.

நமது ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களாக மேற்கண்ட இரு அம்சங்களும் அமைந்த போதும் நடைமுறையில் நாம் பல்வேறுபட்ட துறைகளில் பல்வேறுபட்ட சூழல்களில் நமது ஐக்கியத்தின் பரிணாம வளர்ச்சியைக் கண்கூடாகக் காண்கின்றோம். இது மிகவும் நம்பிக்கைதரும் அம்சமாகும்.

**● இருவேறுபட்ட அமைப்புகள் என்ற வகையில் தங்களுக்கும் த.ம.வி.க.திற்குமிடையில் முரண்பாடுகள் ஒன்றுமில்லையா?**

○ இருவேறு விடுதலை அமைப்புகளின் இருப்பே விடுதலைப் போராட்டத்தின்போது பல்வேறு முரண்பாடுகள் அவற்றிடை தோன்றுதல் சகஜம் என்பதை புலப்படுத்தும். இங்கு முக்கியமான கேள்வி அத்தகைய முரண்பாடுகள் பகைமுரண்பாடாக முற்றுவதைத் தடுத்து அவற்றை இயக்கங்களிடையிலான சபத்துவத்தினதும் நீதியினதும் அடிப்படையில் தீர்த்து வைக்கக்கூடிய அமைப்பு நம்மிடமுள்ளதா என்பதே. இதற்கு எனது பதில் நிச்சயமாக அத்தகைய ஒரு அமைப்பை த.ம.வி.கழகமும் நாமும் இணைந்த கூட்டமைப்புத் தோன்றுவதற்கு முன்பிருந்தே கொண்டிருந்தோமென்பதே. இன்று அத்தகைய அமைப்பு உத்தியோகபூர்வமாகப் பல்வேறு மட்டங்களில் செயல்படுகின்றது. கிராமசேவையாளர் பிரிவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டப் பிரிவு மட்டங்களிலும் தலைமை மட்டங்களிலும் நம் இரு அமைப்புகளின் தோழர்களும் கூடி அவ்வப்போது தமக்குள் ஏற்படும் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் பேசித்தீர்த்துக் கொள்கின்றோம்.

**● தங்களுக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரும் எந்த எந்த அம்சங்களில் முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நமது வாசகர்களுக்குத் தொட்டுக்காட்ட முடியுமா?**

○ இங்கு நமது முரண்பாடுகள் எதுவும் பகைமை முரண்பாடுகளாக இல்லை என்பதை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். பெரும்பாலான முரண்பாடுகள் நடைமுறை சார்ந்ததே. அவ்வப்போது எழும் தவறான விளக்கங்கள் புரிந்துகொள்ளாதமை தொடர்பாகவே இவற்றில்பல தோன்றுகின்றன. எனினும் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக ஏகாதிபத்திய விரோதம் முற்போன ரீதியில் தமிழ் பேசும் மக்களைத் திரட்டி தேசிய இலவிடுதலையை ஆயுதப் போராட்டத்தினூடாக வென்றெடுத்தல், சர்வதேச ரீதியாக சோசலிச நாடுகளுடனும் விரோத சக்திகளுடனும் நட்புறவு, நமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சிங்கள ஏகாதிபத்திய விரோத சக்திகளுடன் தோழமை போன்ற பல்வேறு அம்சங்களிலும் நமது கொள்கைகளே தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் கொள்கையாகவும் உள்ளது.

எனினும் போராட்ட முறைமை தொடர்பாக நமக்குள் சில அடிப்படை முரண்பாடுகள் உள்ளதைக் குறிப்பிடவே வேண்டும். பரந்துபட்ட இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்களது மக்கள் போராட்டத்தையே இரு அமைப்புகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிரதான வடிவமாகக் கொண்டிருக்கிறபோதும் மேற்படி போராட்டத்தை கட்டி எழுப்பும் மார்க்கமாக நாம் கெரில்லாப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டு தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றோம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் மக்களை அமைப்பு ரீதியாக அரசியல் அடிப்படையில் கட்டி எழுப்புவதன் மூலமும் இராணுவ ரீதியான தயாரிப்புகள் மூலமும் மக்கள் போராட்டத்தைக் கட்டி எழுப்புவதில் முனைந்துள்ளனர்.

www.padippakam.com



● தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கற்றுக்கொள்ளுதல் கடினம்.

— பெர்னாட்ஷா

● தொண்டு என்பது இனிமை தரும் கனவு இல்லை; கசப்பான உண்மை!

— வி. ச. காண்டேகர்

**● தமிழீழத் தேசிய இன விடுதலைப் போராட்டத்துக்கான பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்புவதற்கான பணிகளில் உங்கள் பங்கு என்ன என்பதைக் கூறுவீர்களா?**

○ நமது PLOT, TELA அமைப்புகளின் கூட்டணி TELO, EROS, EPRLF அமைப்புகளின் கூட்டணியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தை கௌரவமான ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதில் இரு கூட்டணிகளில் உள்ள அமைப்புகளும் ஆர்வமாக உள்ளன. இவை தவிர இன விடுதலையில் ஆர்வம் கொண்டுள்ள ஆயுதம் தாங்காத தமிழ்பேசும் மக்களது அமைப்புகளுடனும் நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். பரந்துபட்ட ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் இலகுவான ஒரு பணியல்ல எனினும் அது நிச்சயமாக வெற்றியடையப் போகிற பணியாகும்.

**● இறுதியாக நமது 'மக்கள்பாதை' ஏட்டின் ஊடாக தமிழீழ மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

○ எதிரியே சிறந்த ஆசான் என்கிற புகழ்மிக்க பொன் மொழிக்கமைய நமது எதிரி தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் விடுகிற தவறுகள் எம்மைப் பலப்படுத்தி வருகின்றன. இத்தருணத்தில் நமது வல்லமை யாவற்றையும் ஒன்று குவித்தும் எதிரிக்கும் அவனது மூக்கணாங்கயிற்றைக் கையில் வைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான சகலசக்திகளையும் ஒன்று திரட்டியும் நமது தேச விடுதலையை வென்றெடுப்பது அவசியம். இது தொடர்பாக அன்றாடம் நமது மக்கள் செய்யும் தியாகங்களே எமது திசைகாட்டியாக உள்ளது. அவர்களது விருப்பப்படி ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்புவது, ஆக்கிரமிப்பாளரைத் தமிழீழத்திலிருந்து வெளியேற்றுவது, பரந்துபட்ட தமிழ், முஸ்லீம், மலையக தமிழ் மக்களது ஜனநாயக ஆட்சியைக் கட்டி எழுப்புவது என்கிற பணியை நாம் மக்கள் நேசத்துடனும் கொள்கைப்பற்றுடனும் விசுவாசத்துடனும் நிறைவேற்றுவோம் என உறுதி கூறுகின்றேன்.

## நிபந்தனையுடனான விடுதலையை திரு. மண்டேலே நிராகரித்துள்ளார்!

அரசியல்க் கைதியாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தென்னாபிரிக்கக் கறுத்த இன மக்களின் தலைவர் திரு. நெல்சன் மண்டேலேயை சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு உபகாரமாக தென்னாபிரிக்க கறுத்த இன மக்கள் தென்னாபிரிக்க அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென தென்னாபிரிக்க அரசு கேட்டுக் கொண்டதையடுத்து இது போன்ற நிபந்தனையுடனான விடுதலையைத் தான் நிராகரிப்பதாக திரு. மண்டேலே கூறியுள்ளார்.

தான் தனது பிறப்புரிமையை விற்க முடியாது எனவும் அப்படிப் பிறப்புரிமையை விற்றுத்தான் விடுதலையைப் பெறவேண்டுமாயின் அத்தகைய விடுதலை தனக்குத் தேவையில்லையெனவும் திரு. மண்டேலே சொன்னதாக அவரது மகள் செல்வி சின்சி மண்டேலே சொன்னார்.

''நான் எனது மக்களின் பிரதிநிதியாகவும் எனது மக்கள் அமைப்பின் பிரதிநிதியாகவும் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் சிறையிருக்கின்றபோதும் எமது அமைப்புத் தொடர்ந்து தடை செய்யப்பட்ட அமைப்பாகவே கருதப்பட்டுக் கொண்டிருக்கின்றபோதும் நான் மட்டும் எனது விடுதலையைப் பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்'' என இருபது வருடங்களாகச் சிறையிடப்பட்டுள்ள திரு. மண்டேலே முதன் முறையாக நாட்டு மக்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

''அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளைக் கைவிடும் பட்சத்தில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் உறுப்பினர்களை விடுதலை செய்வது'' என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தியதாகவும் திரு. மண்டேலே தனது மனைவிக்கு அனுப்பிய செய்திக் குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

படிப்பகம்